முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, ஆக. 25 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.8.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “தலை நிமிரும் தமிழகம்” என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தை கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவ, மாணவியருக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகளை நடத்தியது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும், உணர்ந்தும், தெளிய வேண்டிய உன்னதவிழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாகவும், தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்பேச்சுப் போட்டிகளில் 4,000 மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு தலா ரூ.20,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 ஆகிய பரிசுகளும், மாநில அளவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ, மாணவியருக்கு தலா ரூ.1,00,000, ரூ,50,000 மற்றும் ரூ.25,000 ஆகிய பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ, மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ, மாணவியர்களும் இப்பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தூய தாமஸ் கல்லூரி வளாகத்தில் நேற்று நடை பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், முதலமைச்சர் அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியருக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், உறுப்பினர் செயலர் வா. சம்பத், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் முனைவர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. அழகிரிசாமி, பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜாகனி, எஸ்.டி. நெடுஞ்செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய தொழில்நுட்பக் கழகப் பணியாளர்களுக்கு

# இந்தி மொழித் தேர்வைக் கட்டாயமாக்குவதா?

## உடனே ரத்து செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.25-

தேசிய தொழில்நுட்பக் கழக பணியாளர்களுக்கான தேர்வில் இந்தி மொழியை கட்டாயமாக்குவதை ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு: -

தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (NIT) மற்றும் ஒன்றியக் கல்வி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பிற நிறுவனங்களில் உள்ள ஆசிரியரல்லாத பணியிடங்களுக்குத் தேசிய தேர்வு முகமை (NTA) இந்தி மொழித் தேர்வைக் கட்டாயமாக்கி இருப்பது மொழிச் சமத்துவத்தைக் குலைக்கும் செயலாகும். பன்முகத்தன்மையை அப்பட்டமாக அவமதிப்பதாகும். இவ்வாறு இந்தியைத் திணிப்பது தமிழ்நாடு உள்ளிட்ட பிற இந்தி பேசாத மாநில இளைஞர்களின் வாய்ப்புகளைப் பறிப்பதாக உள்ளது. நியாயமற்ற இந்தி மொழித் தேர்வை ரத்து செய்து, அனைவருக்குமான தேர்வாக இதனை மாற்றுக.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# டெல்டா மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்கு நாட்கள் பயணம்!

## பல நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

**தஞ்சை, ஆக. 25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நான்கு நாட்கள் பயணமாக காவிரி டெல்டா மாவட்டங்களுக்குச் சென்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி அதிகாரிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கிறார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட கழகத்தினர் தீவிர ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

முதல் நாள் நிகழ்ச்சியாக நேற்று முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி கலையரங்கம் திறப்புவிழா, பவளவிழா மலர் வெளியீட்டுவிழா, திருக்குறள் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**திருக்குவளையில் காலை உணவுத் திட்டம்!**

இன்று (25ந்தேதி) திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் படித்த பள்ளியில் தமிழக அரசின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

அதன் பின்னர் பிற்பகல் நாகை மாவட்டத்திற்குப் புறப்பட்டு செல்கிறார்.

**வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு!**

அங்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சி திட்டப் பணிகளை துறைவாரியாக ஆய்வு செய்கி றார்.

26ந்தேதி காலையில் நாகை மாவட்ட கல்வி அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்துகிறார்.

பின்னர் 27ந்தேதி நாகை எம்.பி.செல்வராஜ் இல்ல திருமண நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் நேற்று திருச்சி சர்வதேச விமான நிலையம் சென்றடைந்தார்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் விழாக்கோலம் பூண்டு வருகிறது. காவிரி டெல்டா மாவட்டக் கழகத்தினர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றிட தயாராகி வருகின்றனர்.

வணிகர்களின்

# கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்!

## வணிகர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



சென்னை, ஆக. 25 -

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (23.8.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், வணிக வரித்துறை சார்பாக, தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தொடக்க உரை ஆற்றிய அரசு செயலாளர் வணிகவரித்துறை (ம) பதிவுத்துறை செயலர், பூவிலிருந்து தேனை பூவிற்கே தெரியாமல் எடுப்பது போல் வணிகர்களிடமிருந்து சிரமமில்லாமல் வரி வசூலிக்க வேண்டும் என கூறினார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில வணிகர் நல பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா, சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர், இரத்தின வேலு , தமிழ்நாடு மாநில வணிகர் நல வாரிய பேரவை தலைவர் வெள்ளையன் ஆகியோர் உள்ளிட்ட 262 வணிக சங்கங்களும், அதன் பிரதிநிதிகளாக 600க்கும் மேற்பட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் நிறைகள், குறைகள் மற்றும் கோரிக்கைகளை அமைச்சரின் முன் வைத்தனர்.

சிறுவணிகர்கள் பாதிக்கா வண்ணம் அபராதம் விதிக்க வேண்டும் எனவும், வணிகர்கள் சிரமத்திற்குள்ளாவதை தடுக்கும் வகையில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கைக்கு வைத்தனர். வணிகவரித்துறையின் முதன்மைச் செயலர் (ம) வணிகவரி ஆணையர் தமது சிறப்புரையில், வணிகவரி செலுத்துவோரின் எண்ணிக்கையை மேம்படுத்த துறைசார் நடவடிக்கையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

வணிகர்கள் பொது மக்கள் செலுத்திய வரியினை முறையாக செலுத்துமாறும், துறை அலுவலர்கள் தவறு செய்யும் பட்சத்தில் உடனடியாக உரிய ஆதாரங்களுடன் கவனத்திற்கு கொண்டு வருமாறும் , மேலும், ஓர் வணிக நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட அரசு அலுவலர்களால் (மத்திய அரசு ) ஆய்வு மேற்க் கொள்ளப்பட்டிருப்பின் அப்பொருள் குறித்து மாநில அரசு அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும். வணிகர்களின் நலன் கருதியே தற்போத Call Centre ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்க்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் GST மத்திய மேல்முறையீடு தீர்ப்பாயம் சென்னை, மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்படுகிறது தெரிவித்தார்.

இதில் அமைச்சர் பி. மூர்த்தி தலைமை வகித்துப் பேசியதாவது:-

கடந்த பிப்ரவரி திங்களில் சிறு தவறுகளுக்கு (பிழை திருத்தம்) ரூ.500/ மட்டும் அபராதமாக செலுத்தி சரக்குகளை கொண்டு செல்வதற்கு ஏதுவாக சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது எனவும், மேற்கொள்ளதவறும் அதிகாரிகள் குறித்து உடனடியாக அரசு மற்றும் துறையின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இதர இனங்களில் வரி குறைப்பு என்பது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்படுவது என்பதால் வணிகர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிதி அமைச்சர் அவர்களின் மூலம் ஒன்றிய அரசுக்கு மேலனுப்ப அரசு தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் வணிகர்களின் நலன் கருதியே அரசு ‘சமாதான திட்டத்தினை’ ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்த உள்ளது. வணிகர்களின் குறைகளை அறிந்து, அதனை களைவதற்காகவும், வணிகர்களிடையே சுமுகமான உறவினை மேம்படுத்த இது போன்ற கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மண்டலம் வாரியாக இணை ஆணையர் நிலையில் நடத்தப்படும்.

வணிகர்களின் குறைகள் கேட்டறிந்து ஒரு நண்பரை போல அரசு செயல்படும் எனவும் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் , சிறு வணிகர்கள் மற்றும் எவரும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர், திருமதி.பா. ஜோதி நிர்மலாசாமி முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார் வணிகவரி கூடுதல் ஆணையர்கள் அ.பா. தேவேந்திர பூபதி, மு.பரமேஸ்வரன், திருமதி கு.லதா, ஜி.முகம்மது நௌபல், ஆர்.எல்.அருண் பிரசாத், வணிகவரித் துறை உயர் அலுவலர்கள், வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில்

# நாதஸ்வரம் - தவில் பிரிவுகளில் இளங்கலை பட்டப் படிப்பு!

## சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஆக. 25 -

சென்னை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் செயல்படும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் பட்டயப்படிப்பு தொடங்கப்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

கலை பண்பாட்டுத்துறையின் கீழ் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயமுத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் இசைக்கல்லூரிகள் செயல்படுகின்றன. இக்கல்லூரிகளில் இசை மற்றும் நாட்டிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள் மற்றும் பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன. குரலிசை, வயலின், வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்புகள் உள்ளன.

இவ்வாண்டு சட்டப் பேரவையில், “சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் பட்டப் படிப்பு தொடங்கப்படும்’’ என அறிவிக்கப்பட்டது.

சட்டமன்ற அறிவிப்பினைச் செயல்படுத்தும் வண்ணம் 2023-2024 கல்வியாண்டு முதல் நாதஸ்வரம், தவில் பிரிவுகளில் பட்டப்படிப்பு தொடங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

சென்னை மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்புக்குச் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன.

பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் சேரலாம்.

இப்பிரிவுகளில் சேர விரும்புவோர் கலை பண்பாட்டுத்துறையின் இணையத்தளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

இணையத்தள முகவரி www.artandculture.tn.gov.in . விண்ணப்பங்கள் 31.08.2023 மாலை வரை அளிக்கலாம்.

நேரில் விண்ணப்பம் அளிக்க விரும்புவோர் - முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி , டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, இராஜ அண்ணாமலைபுரம், சென்னை 600028 தொலைபேசி எண் 044 24937217 அல்லது முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு தஞ்சாவூர் மாவட்டம்613204 தொலைபேசி எண் 04362261600 அணுகலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நிலவில் இந்தியா ...

முதல்பக்கத் தொடர்ச்சி

திட்டமிட்டப்படி ஆகஸ்ட் 1ஆம் தேதி நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 1 மணி இடையிலான நேரத்தில் நிலவை நோக்கிய பயணத்தை தொடங்கியது.

ஆகஸ்ட் 16: நிலவைச் சுற்றி 153 கி.மீ X163 கி.மீ என்ற நீள்வட்டப் பாதையில் சந்திரயான் 3 விண்கலம் சுற்றும்படி பாதை சுற்றுவட்டம் குறைக்கப்பட்டது.

ஆகஸ்ட் 17: சந்திரயான் 3 உந்து சக்தி கலனில் இருந்து விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக பிரிந்தது.

ஆகஸ்ட் 20: 25 கிமீ X 134 கிமீ என்ற நீள்வட்டப் பாதையில் விக்ரம் லேண்டர் நிலவை சுற்றத் தொடங்கியது.

ஆகஸ்ட் 23: விக்ரம் லேண்டர் நிலவின் நிலப்பரப்பில் மாலை 6.04 மணிக்கு வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது.

விக்ரம் லேண்டர் மேற்கொள்ளும் பணிகள்:–

நிலாவின் தென் துருவப்பகுதியில் 70 டிகிரி அட்சரேகையில் லேண்டர் தரையிறங்கியுள்ளது. அந்தப் பகுதியில் தனது ஆய்வுகளைச் செய்யப் போகிறது. நிலாவில் வெப்பம் அதிகமாக இருக்கும் மண் பகுதியில் நடக்கும் மாற்றங்களை அறிவது, நிலாவில் உள்ள பொருட்கள் என்ன நிலையில் உள்ளன, அங்குள்ள வெப்பத்தைத் தாங்கும் தன்மை கொண்டதா அல்லது அந்த வெப்பத்தில் உடையக்கூடிய பொருட்களாக உள்ளனவா என்பது போன்ற தகவல்களை கண்டறிவது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதேபோல், பூமியைப் போலவே நிலாவிலும் நில அதிர்வுகள் உள்ளனவா, இப்போது இல்லையென்றால் முன்பு இருந்தனவா, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தரவுகள் சேகரித்து அனுப்பட உள்ளன.

விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கிய பின்னர், அதன் உள்ளே இருக்கும் ரோவர் வெளியே வரும். இந்த ரோவர் நிலாவின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தரைப்பரப்பின் தன்மை என்ன, வெப்பம் எந்த அளவுக்கு உள்ளது, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தகவல்களைச் சேகரித்து அனுப்பும்.

உலக அளவில் சாதனை படைத்த இஸ்ரோ அறிவியலாளர்களுக்கு உலக அரங்கில் பாராட்டு குவிந்து வருகிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!**

**சந்திரயான்–3 வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இது ஒரு வரலாற்றுச் சாதனை என்றும் சந்திரயான் 1, 2 மற்றும் 3–வழி நடத்திய 3 அறிவியலாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தும் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.**

**சந்திரயான்3 வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கப்பட்டதற்காக இஸ்ரோவுக்கு பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்**

**வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு : –**

**நிலவில் இந்தியா!**

**சந்திரயான்3 வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டதற்காக இஸ்ரோவுக்கு எனது பாராட்டுகள். நிலவுப் பரப்பில் தடம் பதிக்கும் நான்காவது நாடாக இந்தியாவை நிலைநிறுத்தியுள்ள வரலாற்றுச் சாதனை இது. இதற்காக அயராது பாடுபட்டுப் புதுமையை நிகழ்த்தியுள்ள ஒட்டுமொத்த அணியினருக்கும் எனது பாராட்டுகள். இந்திய விண்வெளி ஆய்வில் இது ஒரு பெரும் பாய்ச்சல்!**

**இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இன்னொரு சமூக வலைத்தளப்பதிவு வருமாறு :–**

**சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது தமிழ்நாட்டுக்கு மிகப் பெரும் நிறைவை அளிக்கிறது. சந்திரயான் 1, 2, 3 ஆகிய திட்டங்களை, முறையே மயில்சாமி அண்ணாதுரை, மு.வனிதா, ப.வீரமுத்துவேல் எனத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று சிறந்த அறிவியலாளர்கள் தலைமைப் பொறுப்பில் இருந்து வழிநடத்தியுள்ளனர். இவர்களது அர்ப்பணிப்புணர்வும் திறமையும் நமக்கு எழுச்சியூட்டுகிறது.**

**தமிழ்நாட்டின் இளந்திறமையாளர்கள் அனைவரும் இவர்களது வழித்தடத்தைப் பின்பற்றி, நம் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்காற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

